நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# 2019

## கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

## DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

தரம் : இடைநிலை - மேற்பிரிவு (ஆண்டு 9, 10)

**Level : Intermediate Upper (Year 9 & 10)**

வழங்கப்படும் நேரம் : 90 நிமிடங்கள்

Time Given : 90 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :

மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.

(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

June 2019

## வினாக்கள் 1 - 10 :

### தரப்பட்ட உரைப்பகுதியை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடை தருக.

தமிழ் மொழியின் வளர்ச்சிக்குத் தம் வாழ்வையே அர்ப்பணித்துப் பணியாற்றிய பெரியார்களில் சுவாமி விபுலானந்தருக்குத் தனித்துவமான இடம் உண்டு. மட்டக்களப்பு காரைதீவில் சுவாமிகள் சாமித்தம்பிக்கும் கண்ணம்மைக்கும் மகனாக மயில்வாகனன் என்னும் இயற்பெயருடன் அவதரித்தார்.

1892 ஆம் ஆண்டு தமிழ்த்தாத்தா உ. வே. சாமிநாதையரின் உயரிய உழைப்பால் சிலப்பதிகாரம் அச்சிடப்பட்டுத் தமிழ்ச்சமூகம் கண்டு களித்தது. சிலப்பதிகார இசைத்தமிழ் நுட்பத்தை யாழ்நூல் மூலம் எடுத்தியம்பிய பெருமகன் சுவாமி விபுலானந்தர் பிறந்ததும் அதே ஆண்டிலேயே இணைந்ததால் சிறப்புப் பெற்றது.

சாமித்தம்பியார் மயில்வாகனன் பள்ளிப்பருவம் அடைந்ததும் குஞ்சித்தம்பி என்னும் ஆசானிடம் பாடம் கேட்க அனுப்பி வைத்தார். அத்தோடு வைத்தியலிங்க தேசிகரிடம் தமிழ் இலக்கணம், இலக்கியம், வடமொழி ஆகியவற்றைத் தெளிவுறக் கற்றுத் தேறினார். தமது பன்னிரெண்டாம் வயதிலேயே செய்யுள் இயற்றும் திறன் பெற்ற மயில்வாகனன் தமது ஆசிரியரை வாழ்த்திப் பாடிய பாடல் இது.

”அம்புவியிற் செந்தமிழோடு
ஆங்கிலமும் எனக்குணர்த்தி அறிவு தீட்டி
வம்பு செறி வெண்கமல
வல்லி அருள் எனக்கூட்டி வைத்த குஞ்சுத்
தம்பி யென்னும் பெயருடையோன்
தண்டமிழின் கரைகண்ட தகமையோன் தன்
செம் பதும மலர்ப்பதத்தைச்
சிரத்து இருத்தி எஞ்ஞான்றும் சிந்திப்பேனே”

விபுலானந்தரின் கவிபுனையும் ஆற்றலுக்கு ”ஈசன் உவக்கும் இன்மலர்”, ”கங்கையில் விடுத்த ஓலை”, ”நீரரமகளிர்” போன்றனவும் சான்றாகும்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் பெரும்புலமை பெற்றிருந்த சுவாமிகள் இலத்தீன், கிரேக்கம், சிங்களம், அரபு போன்ற மொழிகளிலும் அறிவு பெற்றிருந்தார்.

விஞ்ஞானத்துறைப் பட்டதாரியான இவர் 1924 இல் இராம கிருஷ்ண மடத்தில் சுவாமி விபுலானந்தர் என்ற நாமத்தைப் பெற்றுத் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

விபுலானந்தரின் தமிழ்ப்பணிகளுள் தலையாயது யாழ் நூல் ஆய்வேயாகும். பண்டைத் தமிழருடைய இசைக்கருவியான யாழ் வழக்கொழிந்து போனதைக் கண்டு அதை மீட்டெடுக்கும் பணியில் 14 ஆண்டுகள் ஆய்வு மேற்கொண்டார். பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்தும் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதை இசைப் பகுதியை ஆராய்ந்தும் பெறப்பட்ட செய்திகளோடு தமது பௌதீகவியல் அறிவையும் பிரயோகித்து யாழைப் படைத்து யாழ்நூலையும் இயற்றினார். அறிவியலும் தமிழியலும் இணைந்ததால் பிறந்ததே யாழ் நூல். இது தமிழ் இசைக்கலையைக் கற்க விரும்புவோருக்கும், ஆராய்ச்சி செய்ய விழைவோருக்கும் முக்கிய ஆவணமாகும்.

1. 1892 ஆம் ஆண்டு எவற்றால் சிறப்பு பெற்றது?
   - A. உ.வே. சா வின் பிறப்பாலும் சுவாமி விபுலானந்தரின் பிறப்பாலும்
   - B. யாழ்நூல் வெளியீட்டினாலும் உ.வே. சா வின் பிறப்பாலும்
   - C. சிலப்பதிகாரம் அச்சிடப்பட்டதாலும் சுவாமி விபுலானந்தரின் பிறப்பாலும்
   - D. இசைத்தமிழ் வெளியீட்டினாலும் சிலப்பதிகாரம் அச்சிடப்பட்டதாலும்

2. வைத்தியலிங்க தேசிகரிடம் மயில்வாகனன் என்ன கற்றார்?
   A. தமிழ் இலக்கணம், இலக்கியம், வடமொழி, ஆங்கிலம்
   B. வடமொழி, இலத்தீன், தமிழ்மொழி
   C. இலத்தீன், ஆங்கிலம், கிரேக்கம்
   D. தமிழ்மொழி, கிரேக்கம், சிங்களம்

3. பன்னிரெண்டாம் வயதில் மயில்வாகனன் யாரை வாழ்த்திப் பாட்டு பாடினார்?
   A. வைத்தியலிங்க தேசிகரை
   B. குஞ்சித்தம்பி ஆசானை
   C. சோமசுந்தரப் புலவரை
   D. பெரியதம்பிப் புலவரை

4. "செந்தமிழோடு ஆங்கிலமும் எனக்குணர்த்தி அறிவு தீட்டி" என்ற வரிகள் விளக்குவது
   A. செந்தமிழுடன் ஆங்கிலத்தையும் அறியச் செய்து அறிவு தந்து
   B. செந்தமிழுடன் ஆங்கிலம் எனக்கு விளங்காது நின்றது.
   C. செந்தமிழும் ஆங்கிலமும் நான் அறியவில்லை.
   D. செந்தமிழும் ஆங்கிலமும் எனக்கு அறியத்தரவில்லை.

5. "மலர்ப்பதத்தைச் சிரத்து இருத்தி எஞ்ஞான்றும் சிந்திப்பேனே" என்ற வரி எதைக் காட்டி நிற்கிறது?
   A. விபுலானந்தரின் அறிவை
   B. விபுலானந்தரின் தமிழ்ப்பற்றை
   C. விபுலானந்தரின் சிரத்தையை
   D. விபுலானந்தரின் குரு பக்தியை

6. விபுலானந்தர் பெரும் புலமை பெற்றிருந்த மொழிகள் எவை?
   A. இலத்தீன், கிரேக்கம், சிங்களம்
   B. தமிழ், வடமொழி, ஆங்கிலம்
   C. தமிழ், இலத்தீன், கிரேக்கம்
   D. தமிழ், ஆங்கிலம், இலத்தீன்

7. விபுலானந்தர் யாழ் நூலை எழுத உதவியவை
   A. பழந்தமிழ் இலக்கியங்கள், சிலப்பதிகாரம், பௌதீகவியல் அறிவு
   B. சிலப்பதிகாரம், அறிவியல், அழகியல்
   C. தமிழிசை, தமிழ் நாடகக் கலை, பௌதீகவியல் அறிவு
   D. பழந்தமிழ் இலக்கியம், நடனம், நாடகம்

8. யாழ்நூல் முக்கிய ஆவணமாக எவருக்கு உதவும்?
   A. தமிழர்களுக்கு
   B. தமிழ் இசைக்கலையை கற்க விரும்புவோருக்கு
   C. தமிழ் இசை ஆராய்ச்சி செய்ய விழைவோருக்கு
   D. மேலே கூறப்பட்ட அனைவருக்கும்

9. குஞ்சித் தம்பி எதில் கரைகண்ட தகமை உடையவர்?
   A. ஆங்கிலத்தில் கரைகண்டவர்
   B. வடமொழியில் கரைகண்டவர்
   C. தண்டமிழின் கரைகண்டவர்
   D. இலத்தீன் மொழியில் கரைகண்டவர்

10. விபுலானந்தர் பாடிய கவிதைகள்
   A. "ஈசன் உவக்கும் இன்மலர்"
   B. "கங்கையில் விடுத்த ஓலை"
   C. "நீரரமகளிர்"
   D. மேற்கூறிய மூன்றும்

**வினாக்கள் 11 – 20**

**பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.**

11. "ஆழமறியாமல் காலை விடாதே" என்ற பழமொழி உணர்த்துவது
    A. கடல் ஆழத்தைப் பார்த்துக் காலை விடு
    B. எந்த விடயத்தையும் ஆராய்ந்து பார்க்கத் தேவையில்லை
    C. புதிதாக எதையும் ஆரம்பிக்கலாம்
    D. நன்மை தீமைகளை ஆராய்ந்து பார்த்தே ஒரு வேலையைத் தொடங்கு

12. "முயற்சி திருவினை ஆக்கும்" என்பதன் பொருள்
    A. ஒருவனது முயற்சியே செல்வத்தையும் மேன்மையையும் தரும்
    B. ஒருவனது முயற்சியே மேலான வினை செய்யும்
    C. ஒருவனது முயற்சியே கூட்டத்தை ஆக்கும்
    D. ஒருவனது முயற்சியே திருவினைத் தேய்க்கும்

13. ஆற்றல் உள்ளவன் எந்தப் பொருளையும் தனக்கு வேண்டியபடி பயன்படுத்த அறிவான் என்பதை விளக்கும் பழமொழி
    A. வெள்ளைக்கில்லை கள்ளச் சிந்தை
    B. தம்பியுடையான் சண்டைக்கு அஞ்சான்
    C. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
    D. சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்

14. தனது பிழையை மறைக்க வேறு காரணம் கூறல் என்பதனை விளக்கும் பழமொழி
    A. துணை போனாலும் பிணை போகாதே
    B. ஆடத் தெரியாதவள் அரங்கு கோணல் என்றாளாம்
    C. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
    D. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்

15. மிகத் தெளிவாகத் தெரிகிறது என்பதை விளக்கப் பொருத்தமான உவமைத்தொடர்
    A. காகம் போலும் கருமை
    B. இஞ்சி தின்ற குரங்கு போல
    C. உள்ளங்கை நெல்லிக்கனி போல
    D. உடும்புப் பிடி போல

16. பிரிவின்றி எப்போதும் இணைந்திருப்பது என்னும் பொருளைத் தரும் உவமைத்தொடர்
    A. எட்பூப் போல
    B. கயல் போலும் கண்
    C. மலரும் மணமும் போல
    D. கிணற்றுத் தவளை போல

17. ஒன்று வந்ததும் மற்றது விலகி விடும் என்னும் பொருளைத் தரும் உவமைத்தொடர்
    A. சூரியனைக் கண்ட பனி போல
    B. சந்திரனைக் கண்ட குவளை போல
    C. தாயைக் கண்ட குழந்தை போல
    D. இடியேறு கேட்ட நாகம் போல

18. பயனற்ற செயல் என்னும் பொருளைத் தரும் உவமைத்தொடர்
    A. வறியவன் வாய்ச்சொல் போல
    B. விழலுக்கு இறைத்த நீர் போல
    C. மணியும் ஒளியும் போல
    D. மழை முகம் காணாப் பயிர் போல

19. "வெண்கலக் கடையில் யானை புகுந்தது போல" என்ற உவமைத்தொடர் வெளிப்படுத்துவது
    A. பெரிய சத்தம்
    B. பெருந்துன்பம்
    C. பெருமகிழ்ச்சி
    D. பெருங்கவலை

20. "கிணறு வெட்டப் பூதம் வெளிப்பட்டது போல" என்ற உவமைத்தொடர் உணர்த்துவது
    A. ஒரு வேலை செய்யும் போது எதிர்பாராத மகிழ்ச்சி
    B. ஒரு வேலை செய்யும் போது எதிர்பாராத இடையூறு
    C. ஒரு வேலை செய்யும் போது எதிர்பாராத தாமதம்
    D. ஒரு வேலை செய்யும் போது எதிர்பாராத விரைவு

**வினாக்கள் 21 – 25**

**பின்வரும் வாக்கியங்களில் பிழையாக எழுதப்பட்ட சொல்லின் சரியான சொல்லை எழுதுக.**

21. ஆனந்தவிகடனில் வெலிவந்த எழுத்தாளர் பாலகுமாரனின் முதற்கதை "தாயுமானவன்" ஆகும்.
    A. வெளிவந்த B. எழுத்தாளர் C. முதற்கதை D. பாலகுமாரன்

22. சோளர்களின் கொடியில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.
    A. கொடியில் B. சோழர்களின் C. புலிச்சின்னம் D. பொறிக்கப்பட்டு

23. எந்தத் தொளிலையும் ஏற்றுச் செய்யும் மனநிலை மிக உயர்வானது.
    A. செய்யும் B. மனநிலை C. தொழிலையும் D. எந்தத்

24. தமிழ்மொழியோடு தமிழ்ப்பன்பாட்டையும் நாம் பேணி வளர்க்க வேண்டும்.
    A. தமிழ்மொழியோடு B. தமிழ்ப்பண்பாட்டையும் C. பேணி D. வளர்க்க

25. சிறுகதைத் தொகுதிகள் நாலுக்குநாள் வெளிவந்த வண்ணம் உள்ளன.
    A. சிறுகதை B. தொகுதிகள் C. நாளுக்குநாள் D. வண்ணம்

**வினாக்கள் 26 – 30 பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

26. காடும் காடுசார்ந்த பிரதேசமும் எவ்வாறு அழைக்கப்பட்டது?
    A. குறிஞ்சி B. முல்லை
    C. நெய்தல் D. பாலை

27. மணிமேகலைக் காப்பியத்தை எழுதியவர் யார்?
    A. இளங்கோவடிகள் B. சீத்தலைச்சாத்தனார்
    C. கம்பர் D. திருத்தக்கதேவர்

28. தமிழில் உள்ள இதிகாசங்கள் இரண்டும் எவை?
    A. சிலப்பதிகாரம், மணிமேகலை B. ஆத்திசூடி, கொன்றைவேந்தன்
    C. மகாபாரதம், இராமாயணம் D. நளவெண்பா, கலிங்கத்துப்பரணி

29. இலக்கிய வரலாற்றில் காப்பியகாலம் எனப்படுவது எது?
    A. சங்ககாலம் B. சோழர்காலம்
    C. பல்லவர்காலம் D. நாயக்கர்காலம்

30. எட்டுத்தொகை பத்துப்பாட்டு என்பவை
    A. நாயக்கர்கால இலக்கியங்கள் B. சங்கமருவியகால இலக்கியங்கள்
    C. சங்ககால இலக்கியங்கள் D. சோழர்கால இலக்கியங்கள்

**வினாக்கள் 31 – 35 பொருத்தமான சொற்றொடர்களை தெரிந்து இடைவெளிகளில் எழுதுக.**

கரைபுரண்டு, அரைகுறையாக, மனநிறைவோடு, சுறுசுறுப்பாக, வாக்குவாதம்

31. பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறிய வாசுகி .................... இருப்பதை அவளது முகம் காட்டியது.
32. பெருமழை பெய்து வெள்ளம் பெருகியதால் ஆறு .................... ஓடியது.
33. குமணன் அவசரத்தில் தனது வகுப்பு ஒப்படைகளை .................... செய்து முடித்தான்.
34. பேருந்துத் தரிப்பிடத்தில் இருவருக்கிடையில் உண்டான .................... கைகலப்பாக மாறியது.
35. காலை எழுந்ததும் மாலதி .................... தனது வேலைகளை முடித்துக்கொண்டு பாடசாலைக்கு ஆயத்தமானாள்.

**வினாக்கள் 36 – 40**

**கீழுள்ள புலவர்களின் பெயரை அவர்கள் பாடிய இலக்கியங்களுடன் இணைக்க.**

பாரதியார், ஒட்டக்கூத்தர், ஔவையார், நக்கீரர், கம்பர்

36. மூவருலா ....................
37. குயிற்பாட்டு ....................
38. மூதுரை ....................
39. திருமுருகாற்றுப்படை ....................
40. இராமாயணம் ....................

**வினாக்கள் 41 – 45**

**பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொற்களைத் தெரிவு செய்க.**

வலையொளி, காயலை, விரலி, வருடி, செறிவட்டை

41. Skype
42. Thumb drive
43. Scanner
44. You tube
45. Sim card

**வினாக்கள் 46 – 55**

**பின்வரும் சொற்களைப் பொருத்தமான இடைவெளிகளில் வைத்துப் பந்தியை நிறைவு செய்க.**

கபளீகரம், கரையில், ஈரமணலை, சிப்பிகளையும், மகிழ்ச்சியில், மிக அழகாக, உயர்ந்து, அடுக்குகளை, உள்வாங்கிக்கொண்டு, சோகிகளையும் (சோழிகளையும்).

சிறுவர்கள் கடற்கரையில் (46) ....................கொண்டு மணல் வீடு கட்டினார்கள். பல (47).................... உடையதாக அந்த வீட்டை அமைத்தார்கள். (48) ....................(49)....................கொண்டு வீட்டை அலங்கரித்தனர். அந்த வீடு பார்ப்பதற்கு (50)....................இருந்தது. சிறுவர்கள் எல்லோரும் (51) ....................ஆரவாரமிட்டனர். சற்று நேரத்தில் (52) ....................எழுந்த அலை ஒன்று வேகமாக வந்து (53) ....................மோதியது. அது அப்படியே வீட்டைக் (54) .................... செய்து (55) .................... கடலுள் சென்றது.

**எழுத்து ஆக்கம்**

**பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிந்து 150 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. தாய்மொழி தமிழைக் கற்க அறிவுரை கூறி ஊக்குவித்து அயல் மாநிலத்தில் வாழும் நண்பன் அல்லது நண்பிக்குக் கடிதம் எழுதுக.

2. உம்மைக் கவர்ந்த பெரியார் ஒருவரைப் பற்றித் தமிழ்ப் பாடசாலையில் ஆற்றவுள்ள பேச்சை எழுதுக.

3. “எமது சுற்றுச் சூழல் மாசடையாது பேணுவோம்” என்ற தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

# 2019